# இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இயேசு மறுமொழியாக, "எனது ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல. அது இவ்வுலக ஆட்சி போன்றதாய் இருந்திருந்தால் நான் யூதர்களிடம் காட்டிக் கொடுக்கப்படாதவாறு என் காவலர்கள் போராடியிருப்பார்கள். ஆனால் என் ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல" என்றார். பிலாத்து அவரிடம், "அப்படியானால் நீ அரசன்தானோ?" என்று கேட்டான். அதற்கு இயேசு, "அரசன் என்று நீர் சொல்கிறீர். உண்மையை எடுத்துரைப்பதே என் பணி. இதற்காகவே நான் பிறந்தேன்; இதற்காகவே உலகிற்கு வந்தேன். உண்மையைச் சார்ந்தவர் அனைவரும் என் குரலுக்குச் செவிசாய்க்கின்றனர்" என்றார். (யோவான் 18:35-37)



# கோவில்களின் வாசலுக்கு உரியவர்கள் அல்ல வறியோர், மாறாக அவர்கள், திருஅவையின் இதயத்திற்கு உரியவர்கள்

## ஐந்தாவது உலக வறியோர் நாளில் திருத்தந்தை வேண்டுகோள்!

**வத்திக்கான்:** வறியோரில் கிறிஸ்துவைக் கண்டுணர்ந்து, அவர்களின் துயர் துடைக்கப்படுவதற்கு நம் குரலை உயர்த்த நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நவம்பர் 13, சனிக்கிழமையன்று தமது டுவிட்டர் வலைப்பக்கத்தில் வெளியிட்ட செய்தியில் கூறியுள்ளார்.

நவம்பர் 14, கடந்த ஞாயிறன்று திருஅவையில் கடைப்பிடிக்கப்படும் ஐந்தாவது உலக வறியோர் நாளை மையப்படுத்தி சனிக்கிழமையன்று தமது டுவிட்டர் செய்தியில் இவ்வாறு எழுதியுள்ள திருத்தந்தை, வறியோர் வழியாக, கடவுள் நமக்குக் கூற விரும்பும் மறைபொருளான அவரது ஞானத்தை வரவேற்கவும், வறியோரின் நண்பர்களாக இருக்கவும், அவர்கள் பேசுவதைக் கேட்கவும், அவர்களைப் புரிந்துகொள்ளவும் நாம் முயற்சிக்க வேண்டும் என்ற கூறியுள்ளார்.

2016ம் ஆண்டில் இரக்கத்தின் யூபிலி ஆண்டை நிறைவு செய்த போது, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கிறிஸ்து அரசர் பெருவிழாவுக்கு முந்தைய ஞாயிறாகிய, திருவழிபாட்டு ஆண்டின் 33-ம் ஞாயிறன்று உலக வறியோர் நாள் கடைப்பிடிக்கப் படுமாறு, உலகளாவியத் திருஅவைக்கு அழைப்புவிடுத்தார்.

நவம்பர் 14, கடந்த ஞாயிறு உள்ளூர் நேரம் காலை பத்து மணிக்கு வத்திக்கானின் புனித பேதுரு பேராலயத்தில் ஐந்தாவது உலக வறியோர் நாள் திருப்பலியை நிறைவேற்றினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மேலும், ஐந்தாவது உலக வறியோர் நாளை முன்னிட்டு, நவம்பர் 12, கடந்த வெள்ளி காலையில், இத்தாலியின் அசிசி நகர் சென்று, அந்நகரின் தூதர்களின் புனித மரியா பேராலயத்தில் ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருந்த ஏறத்தாழ 500 வறியோரைச் சந்தித்து, அவர்களோடு சேர்ந்து செபித்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

வறுமை, ஏராளமான நம் சகோதர, சகோதரிகளை, மாண்பிழக்கச் செய்கின்றது, அவர்களைப் புண்படுத்துகின்றது மற்றும் உயிரைப் பறிக்கின்றது. எனவே,



இம்மக்களின் குடும்பங்களுக்கு ஆதரவாகவும், வேலை வாய்ப்புகளை வழங்கவும் தீர்வுகள் காணும், நன்னெறி மற்றும் பொருளாதார சக்திகளோடு எல்லாரும் இணைந்து செயல்பட வேண்டும் என்று திருத்தந்தை, உலகினர் அனைவருக்கும் அழைப்பு விடுத்தார். வறியவரில் கிறிஸ்துவைக் காண முற்பட வேண்டும்.

சிறைகளில் துயரங்களை அனுபவிப்போர், குடிசைகளில் வாழ்வோர், போர்ச் சூழல்களில் வாழ்வோர், கைவிடப்பட்டோர், தனிமையில் இருப் போர் ஆகியோர், ஒவ்வொரு நாளும், எதை உண்பது, எங்கு படுத்துறங்குவது என அல்லாடிக் கொண்டிருப்பது, மிகுந்த மன வேதனை தருவதாக உள்ளது எனவும் தெரிவித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

பிறரன்பு பணிகளில் ஈடுபடுவோர், இறையன்பு எனும் நற்செய்தியை, வறியோர், சின்னஞ்சிறியோர், நோயுற்றோர், வாழ்வில் காயமுற்றோர் என அனைவரிடமும் பகிர்வதுடன், நமக்குள் இருக்கும் வெறுமையை நிரப்ப நமக்கும் இறையன்பின் தேவை உள்ளதால், நாமும் ஒருவகையில் வறியோரே என்பதை உணர்ந்தும் வாழ்வோம் என அழைப்பு விடுத்துள்ளார் திருத்தந்தை.

மிகச் சிறியோராகிய இவர்களுக்கு நீங்கள் செய்தது எல்லாம் எனக்கே செய்தீர்கள் எனவும், என் பெயரால் சிறியோரை, வறியோரை வரவேற்கும்போது என்னையே வரவேற்கிறீர்கள் எனவும், இயேசு கூறிய வார்த்தைகள், நற்செய்தி கூறும் ஒருமைப்பாட்டிற்கான அழைப்பு எனக் கூறும் திருத்தந்தை, இதனாலேயே வறியோரை, திருஅவையின் பெரும் புதையல் என்கிறோம் என அவரது செய்தியில் உரைத்துள்ளார்.

வறியோரை காயப்படுத்திய, புறக்கணித்த, அவமானப்படுத்திய கிறிஸ்தவர்களின் பெயரால், தான் அவர்களிடம் மன்னிப்பைக் கோருவதாக, அந்த காணொளிச் செய்தியின் இறுதியில் கூறும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வறியோர் என்றும் இறைவனின் இல்லமாகவும், திருஅவையின் புதையலாகவும் உள்ளார்கள் என தெரிவித்துள்ளார்.

கோவில்களின் வாசலுக்கு உரியவர்கள் அல்ல வறியோர் மாறாக, அவர்கள் திருஅவையின் இதயத்திற்கு உரியவர்கள், அவர்களிடையே புனிதர்கள் மறைந்திருக்கிறார்கள் என மேலும் வலியுறுத்தினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

# சிரம்பானில், வறியோருக்கு நிதி திறட்டும் பணி சிறப்பாக நடைபெற்றது

**சிரம்பான்:** மினவுதல் அன்னை பங்கு, தேவையில் இருப்போருக்கு நிதி திரட்டுவதற்காக கடந்த அக்டோபர் மாதம் 30 மற்றும் 31 ஆம் திகதிகளில் ஒரு சிறப்பு சந்தைக்கு ஏற்பாடு செய்தது. இந்நிகழ்வின் வழி RM 4027.00 திரட்டப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது.





தேவைப்படும் மக்களைச் சென்றடையும் பணியைத் தொடர, இந்தப் பணம் இப்பங்கின் ஒருங்கிணைந்த மனித மேம்பாட்டு நிதியில் சேர்க்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

திரட்டப்பட்ட அனைத்து பொருட்களும் இப்பங்கின் Laudato Si பணிக்குழுவின் (குறைத்தல், மறுபயன்பாடு & மறுசுழற்சி) திட்டத்திலிருந்தும் மேலும் இச்சந்தையை ஆதரித்த பங்கு மக்கள் சிலரிடமிருந்தும் பெறப்பட்டது. அவை ஆடைகள், பொம்மைகள், புத்தகங்கள், வீட்டுப் பொருட்கள், பைகள், காலணிகள், அலங்காரப் பொருட்கள், தரைவிரிப்புகள், மின்சார உபகரணங்கள் மற்றும் 2 கிறிஸ்துமஸ் மரங்கள் போன்றவை ஆகும்.

இந்த இலவச சந்தையை ஏற்பாடு செய்வதற்காக தன்னார்வலர்கள் எட்டு



நாள்கள் விடாமுயற்சியுடன் உழைத்தனர். அருள்பணி சேவியர் என்ரூ அவர்களின் அவ்வப்போதைய திடீர் வருகைகள் பணியாளர்களுக்கு நல்ல ஊக்கத்தை அளித்து என்றால் மகையாகாது.

தொடர்ச்சி –அடுத்துப் பக்கம்

## சிரம்பானில், வறியோருக்கு நிதி திரட்டும் பணி சிறப்பாக நடைபெற்றது

முதல் பக்கத் தொடர்ச்சி..

இச்சந்தையை ஏற்பாடு செய்யும் எண்ணமானது, எங்கள் பங்கு ஒருங்கிணைந்த மனித வள பணிக்குழு (PIHDM) தத்தெடுத்துள்ளவர்களை வரவழைத்து, அவர்களுக்குத் தேவையான பொருட்களை மிகக் குறைந்த விலையில் வாங்குவதற்கு ஒரு வாய்ப்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. சில பொருட்கள் குறிப்பாக ஆடைகள் இலவசமாகவும் வழங்கப்பட்டன.

அக்டோபர் 30 அன்று, தத்தெடுத்தவர்களுக்கு அவர்களின் மாதாந்திர உணவுப் பொருட்களோடு, RM100 ரொக்கமும் தீபாவளிப் பரிசாக வழங்கப்பட்டது. அடுத்து, நவம்பர் 7 ஆம் தேதி, Tzu Chi குழுக்கள் கத்தோலிக்க மையத்திற்கு வந்து, மறுசுழற்சி செய்வதற்காக மீதமுள்ள அனைத்து ஆடைகளையும் சேகரித்தனர்.

'அனைத்துப் புகழும் உமக்கே இறைவா! எனும் 'Ludato Si' க்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அழைப்பின் பேரில் நமது பொதுவான இலக்கை நோக்கிய ஆதரவிற்காக அனைத்து தன்னார்வலர்களுக்கும் பங்களிப்பாளர்களுக்கும் நன்றி நவிலப்பட்டது.

## நீதி - அமைதி பணிக்குழுக்களுக்கு திருத்தந்தையின் செய்தி

மனித சமுதாயத்தின் பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் நிலவும் முரண்பாடுகளை, கோவிட்-19 பெருந்தொற்று வெளிச்சத்திற்குக் கொண்டுவந்துள்ளது என்றும், இந்த முரண்பாடுகளை சரிசெய்வது திருஅவையின் கடமை என்றும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இணையம் வழியே வெளியிட்ட ஒரு செய்தியில் கூறியுள்ளார்.

முழு மனித மாண்பும், மனித உரிமைகளும் நிலைநாட்டப்படுவது, ஒருங்கிணைந்த மனித முன்னேற்றத்தின் ஒரு முக்கிய அம்சமாக திகழவேண்டும் என்றும், வறியோரும், மற்றவர்களால் ஒதுக்கப்பட்டோரும், இப்பணிக்குரிய மக்களாக தெரிவு செய்யப்படவேண்டும் என்றும் திருத்தந்தை தன் செய்தியில் வலியுறுத்திக் கூறினார்.

ஜெரோம் லூயிஸ் - வத்திக்கான் செய்திகள்

## கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் அருள்பணியாளர்களின் ஆண்டு பொதுக்கூட்டம் நடைபெற்றது- சிலரின் கருத்துப் பகிர்வுகள்



கோலாலம்பூர் மாமறைமறைமாவட்டத்தின் அருள்பணியாளர்கள் அவர்களின் வருடாந்திர மேய்ப்புப் பேரவையில் (CAPA) கலந்துகொண்டனர். இப்பேரவையின் அமர்வுகள் யாவும் இயங்கலை வழியாக நடத்தப்பட்டாலும், எங்களது தோழமை மற்றும் பங்கேற்பின் உணர்வு மிகவும் உயிருடன் இருந்தது. சகோதர அருள்பணியாளர்களை சந்திப்பதற்கும் கடந்த கால மற்றும் நிகழ்கால அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் நல்லதொரு வாய்ப்பாக இப்பேரவை அமைந்து எனலாம்

அத்தோடு நான் நினைவுகூர்ந்த சில அனுபவங்கள், திருஅவையினர் மற்றும் பிற மத நண்பர்களிடையே ஏற்பட்ட நல்லிணக்க ஒன்றிப்பு நிகழ்வுகள், நம் மத்தியில் நெருங்கிய உறவுகளை மேம்படுத்தியது என்பது எனக்கு மகிழ்ச்சியளித்தது. உண்மையிலேயே, 'ஒரே குடும்பம்' எனும் கொள்கையை நாம் அடைந்துவிட்டதாக உணர்ந்தேன்.

'ஒன்றித்த திருஅவைக்காக' இறைமக்களே, உங்கள் மகிழ்ச்சியான மற்றும் சவாலான அனுபவங்களை நினைவுகூருங்கள்; எதிர்காலத்தில் கிறிஸ்துவின் பணிக்காக செயலில் பதிலளிக்க நற்செய்தியின் வெளிச்சத்தில் அதை மதிப்பாய்வு செய்ய வேண்டுகிறேன்.

**அருள்பணி: A. அல்பெர்ட் ஆரோக்கியசாமி**
**குவடோலுப்பே அன்னை பங்கு, பூச்சோங்**



இதுவே மாமறை பேரவையில் கலந்துகொள்வது எனக்கு முதல் முறை. இவ்வாண்டும் இப்பேரவை இயங்கலை வாயிலாக நடத்த வேண்டியிருக்கும் போது அது கடவுளின் திட்டத்திற்கு உட்பட்டது என்று நான் நம்புகிறேன். இருப்பினும், நான் உடல் ரீதியாகத் தனிமைப் படுத்தப்பட்டிருந்தாலும், இயங்கலை சந்திப்பில் பங்கேற்க முடிந்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மொத்தத்தில், அருள்பணியாளர்கள் ஒன்றுகூடி, கருத்துக்களையும் அனுபவங்களையும் பகிர்ந்துகொண்டதும், இறுதியில் நம்மை கடவுளுடைய வார்த்தைக்கு இட்டுச் சென்றதில் நான் மிகவும் புத்துணர்ச்சியடைந்தேன்.

தூய ஆவியாரின் வழிகாட்டுதலுடன் நாம் ஒரு ஒன்றித்த 'சினோடல்' சபையாக எழுவோம், எப்போதும் கடவுளின் விருப்பத்தை அறிந்துகொள்வோம்

**அருள்பணி: பொனவெஞ்சர் இராயப்பன்,**
**புனித லூர்து அன்னை பங்கு, கிள்ளான்**



இவ்வருட அருள்பணியாளர்கள் ஆண்டு பேரவை நேருக்கு நேர் கூடும் பேரவையாக இருக்கும் என்று நான் முதலில் கேள்விப் பட்டபோது, மிகவும் மகிழ்ச்சிய டைந்தேன். ஆனாலும் அனைவரின் ஆரோக்கியத்தின் நலன் கருதி, நேருக்கு நேரான பேரவை நிறுத்தப்பட்டது. அதற்குப் பதிலாக நாங்கள் இயங்கலை வாயிலாகவே சந்தித்தோம்.

மாமறைமாவட்டத்தின் அனைத்து அருள்பணியாளர்களுடன் "சந்திப்பு" என்பது எப்போதுமே நான் எதிர் பார்த்திருக்கும் ஒன்று என்றால் மிகையாகாது. எனவே, இயங்கலை வழியிலான சந்திப்பாக இருந்தாலும் கூட, நமது எதிர்கால திருஅவையின் முன்னேற்றத்திற்காக எனது எண்ணங்களையும் கருத்துகளையும் பகிர ஒரு சிறந்த வாய்ப்பாக இப்பேரவை அமைந்தது.

இக்கூட்டத்தில் நான் பகிர்ந்த பகிர்வுகள் என் இதயத்திலிருந்து வந்தவை என்றுணர்ந்தேன். ஓர் அருள்பணியாளர் என்ற எங்கள் பணியில் இந்த தொற்றுநோய் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. இந்த பொதுப் பேரவையிலிருந்து நான் அறிந்து கொண்டவை என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நம்பிக்கையாளர்களுடனான எனது பயணத்திற்கு உறுதுணையாக இருக்கும் என்று நம்புகிறேன்.

**அருள்பணி: வின்சண்ட் தோமஸ்,**
**திருக்குடும்பப் பங்கு, காஜாங்**

ஆரம்பத்தில் மாமறைமாவட்டத்தின் மேய்ப்புப் பணி மையத்தில் (APC) நாங்கள் சந்திக்கவிருப்பதாக இருந்தது. ஆனால், ஏமாற்றமடைந்தேன். இந்த ஆண்டுக்குள் 2-வது இயங்கலை வழி மாமறைமாவட்ட அருள்பணி யாளர்களின் பொதுப் பேரவை நடைபெறுவது எனக்கு உண் மையில் விசித்திரமாக இருந்தது. ஆயினும், அருள்பணியாளர்களுக் கிடையிலான சினோட் முன்னிட்ட பகிர்வு அமர்வுகள் ஒரு புத்துணர்ச் சியூட்டும் நிகழ்வாக அமைந்தது. மேலும் நாங்கள் ஒன்றாகப் பயணித்தபோது பல மேய்ப்புப்பணி பிரச்சினைகள் வெளிப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.



**அருள்தந்தை பெட்ரிக் பூட்வில்**
**புனித தோமையார் பங்கு, குவந்தான்**

## என்றுமுள மானிட மகனின் ஆட்சியுரிமையில் பங்குபெறுவோம்

இறைவாக்கினர் தானியேல் நூலிலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதல் வாசகத்தில் வாசிக்கின்றோம், "வானத்தின் மேகங்களின் மீது மானிட மகனைப் போன்ற ஒருவர் தோன்றினார். ஆட்சியுரிமையும் மாட்சியும் அவருக்குக் கொடுக்கப்பட்டன; எல்லா இனத்தாரும் நாட்டினரும் மொழியினரும் அவரை வழிபட வேண்டும்; அவரது ஆட்சியுரிமை என்றுமுள்ளதாகும்; அதற்கு முடிவே இராது; அவரது அரசு அழிந்து போகாது" என்று. ஆம், இயேசுவின் அரசு ஒரு குறிப்பிட்ட காலத்தில் தோன்றி, குறிப்பிட்ட காலத்திற்குள் மறையக்கூடிய அரசு கிடையாது. அவருடைய அரசாங்கம் என்றுமுள்ள அரசு, அவருடைய ஆட்சிக்கு முடிவு என்பதே கிடையாது. அதனால்தான் இயேசுவின் அரசு இவ்வுலக அரசு போன்றது கிடையாது என்று சொல்கின்றோம்.

இப்படிப்பட்ட அழியாத, என்றுமுள்ள அரசாங்கத்தின் குடிமக்களாக வாழ வேண்டும் என்றால், அதற்கு நாம் என்ன செய்யவேண்டும் என்று சிந்தித்துப் பார்ப்பது நம்முடைய கடமையாகும்.

நற்செய்தியில் ஆண்டவர் இயேசு பிலாத்துவிடம், "அரசன் என்று நீர் சொல்கின்றீர். உண்மையை எடுத்துரைப்பதே என் பணி. இதற்காகவே நான் பிறந்தேன்; இதற்காகவே உலகிற்கு வந்தேன்" என்று சொல்லிவிட்டு, "உண்மையைச் சார்ந்தவர் அனைவரும் என் குரலுக்குச் செவி கொடுப்பர்" என்பார். அப்படியானால், உண்மையின் வழியில் நடக்கின்ற அனைவருமே இயேசுவின் என்றுமுள்ள அரசின் குடிமக்களாகத் திகழ்வார்கள் என்பது உறுதியாகின்றது. நாம் நம்முடைய அன்றாட வாழ்க்கையில் உண்மையின் வழியில், உண்மையின் வடிவான ஆண்டவர் இயேசுவின் வழியில் நடக்கின்றோமா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். பல நேரங்களில் நாம் உண்மைக்குப் புறம்பாக வாழ்ந்துகொண்டிருப்பது மிகவும் வேதனை அளிக்கின்ற ஒரு செயலாக இருக்கின்றது. ஆகவே, இயேசுவின் மறுவுலக அரசில் நாம் பங்குபெற, அவருடைய உண்மைக் குடிமக்களாக வாழ நாம் உண்மையின் வழி நடக்க வேண்டும்.

அடுத்ததாக, இயேசுவின் மறுவுலக அரசில் பங்குபெற நாம் செய்யவேண்டியது அவரைப் போன்று அனைவரையும் அன்பு செய்வதாகும். இயேசு எல்லாரையும் அன்பு செய்து, அவர்களுக்காகத் தம்முடைய உயிரையும் தந்தார் என்று இன்றைய இரண்டாம் வாசகத்தில் ஏற்கனவே சிந்தித்தோம். அவருடைய வழியில் நடக்கும் நாமும் அவரைப் போன்று அனைவரையும் அன்பு செய்வதுதான் அவருடைய ஆட்சியில் பங்கு பெற தகுதியாக இருக்கும்.

இன்றைக்கு மக்கள் ஒருவர் மற்றவரை அவர் வைத்திருக்கும் பணத்திற்காகவும், அவர்கள் வகிக்கின்ற பதவிக்காகவும் அன்பு செய்கின்றார்கள். இதனால் உண்மையான அன்பு என்பது கானல்நீராகப் போய் விட்டது. ஆனால், இயேசுவின் ஆட்சிக்குரிய மக்களாகிய நாம் ஒருவர் மற்றவரிடம் உண்மையான அன்பினைக் காட்ட வேண்டும். அப்போதுதான் அவருடைய ஆட்சியில் கலந்துகொண்டு, அவர் தருகின்ற அருளைப் பெறமுடியும்.

கிறிஸ்துவை அனைத்துலக அரசர் என்று கொண்டாடும் இந்த விழாவன்று, அடிமைகளாக வாழ்வதில் சுகம் கண்டு, தலைவர்களையும், தலைவிகளையும் துதிபாடி வாழும் மக்கள், தங்கள் தவறுகளிலிருந்து விழித்தெழவேண்டும் என்றும், உண்மையானத் தலைவர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்குத் தலைமைப் பொறுப்புகளை வழங்கி, அவர்களுடன் இணைந்து, நீதி நிறைந்த உலகை உருவாக்க முன்வர வேண்டும் என்றும், அனைத்துலக அரசர் கிறிஸ்துவிடம் வேண்டுவோம். இயேசுவின் அரசே நமக்கான உண்மையின் நீதியின் அரசு.

-ஆரோக்கிய ராஜ். ஈப்போ, பேராக்

**இயேசு கிறிஸ்து அனைத்துலக அரசர்**

| | |
|---|---|
| 1-ம் வாசகம்: | தானி 7: 13-14 |
| தி. பாடல்: | திபா 93: 1a-c. 1de-2. 5 |
| 2ம் வாசகம்: | நோவான் 1: 5-8 |
| நற்செய்தி: | யோவான் 18: 33-37 |

ஞாயிறு வாசகம் ஆண்டு 2
வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 1
திருப்புகழ் மாலை -கிறிஸ்து அரசர்